THIRU A. R. DAMODARAN : How is it possible for the Government to start sanatoria without investigating the possibilities of water-supply in the area concerned ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It has now been made up.

MR. CHAIRMAN : It is a case of sudden disappointment.

Cycle and bullock cart taxes

*208 *Q.*—THIRU N.R.THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the taxation of cycles and carts was cancelled in Virudhunagar Municipality ; and

(*b*) the loss incurred by the Municipality thereby ?

சைக்கிள், மாட்டுவண்டி வரிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருதுநகர் நகர சபையில் சைகிள் வரி, மாட்டு வண்டி வரி ரத்து செய்யப்பட்டதா ?

(இ) இதன் மூலம் நகரசபைக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்விரு எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, விருதுநகரில் அந்த முனிசிபாலிடியில் இத்தகைய தீர்மானம் ஒன்று நிறைவேற்றியதாக அந்த முனிசிபல் கவுன்சிலரே என்னிடம் கூறினுர். சர்க்கார் அனுமதி கொடுத்தால் சைக்கிள், வண்டிகளுக்கு வரி வசூலிக்க மாட்டோம். சர்க்காரிடம் அனுமதி வாங்கிக் கொடுக்க மாட்டீர்களா என்று கேட்டார். தீர்மானம் இதுவரை நிறைவேற்றியிருக்காவிட்டாலும், இனிமேல் நிறைவேற்றி அனுப்பினுல் அரசாங்கம் பரிசீலிக்குமா ? அனுமதி கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது போன்ற வரிகளை வசூலிக்க வேண்டுமென்று மிகமிக முந்திய காலத்தில் நிர்ணயிக்கப்பட்டது. அவருக்கு மிக நெருங்கிய அரசாங்கத்திடமே இதைக் கேட்டு தள்ளுபடி செய்திருக்கக் கூடும். ஆனுல் தள்ளாமல் இருக்கக் காரணம் இதைத் தள்ளிவிட்டால் நகராட்சி மன்றம் நல்ல முறையில் இயங்க முடியாது என்பதனுல் தான் அவர்களே தள்ளாமல் இருந்திருக்கிருர்கள். இந்த அரசாங்கம் அதைத் தள்ளுகிற உத்தேசமில்லை.

Collection of Panchayat Tax in Cheevalapperi Village.

*209 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Panchayat tax is collected now in lumpsum which was not collected for the past 10 years at Cheevalapperi of Tirunelveli District ; and

(*b*) whether the Act admits collection of arrears of tax due for over three years ?

7th March 1968]

சிவலப் பேரியில் பஞ்சாயத்து வரி வசூல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்ட சீவலப்பேரியில் பஞ்சாயத்து வரி வசூல் 10 வருடமாக செய்யாமல் மொத்தமாக தற்போது வசூல் செய்யப் படுகிறதா ?

(இ) மூன்று வருடங்களுக்கு மேல் உள்ள வரி பாக்கி வசூல் செய்ய சட்டம் அனுமதிக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1959–60-ம் ஆண்டு முதல் வரி நிலுவை வசூல் செய்யப்பட வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை யை வசூல் செய்யும்படி, கிராம அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது.

(இ) ஆம். திருத்தப்பட்ட தமிழ்நாடு 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 165-வது பிரிவில் ஆறு ஆண்டு காலம் வரையில், வரி நிலுவை வசூலிக்கப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

Mayiladumparai-Krishnapuram Road

*210 *Q.*—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a road had been formed from Mayiladumparai in Zamin Kandamanaickanoor of Madurai District to Krishnapuram of Thirumangalam Taluk at an expenditure of more than a lakh of rupees some ten years ago ;

(*b*) whether the road was damaged completely due to non-maintenance ; and

(*c*) whether the road will be repaired soon ?

மயிலாடும்பாறை கிருஷ்ணபுரம் சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாவட்ட கண்டமநாயக்கனூர் ஜமீன் மயிலாடும் பாறையி லிருந்து திருமங்கலம் தாலுக்கா கிருஷ்ணபுரத்திற்கு 10 ஆண்டுகளுக்கு முன் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து சாலே போடப்பட்டதா ?

(இ) அந்த ரோடு மராமத்து செய்யாததால் யாவும் அழிந்துவிட்டதா?

(உ) விரைவில் மராமத்து செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1956–58 ஆண்டுகளில் மத்திய சாலே நிதி மானியத்தின் கீழ் மல்லபுரம்—நரசிங்கபுரம் சாலே என்ற பெயருடன் இந்தச் சாலே அமைக்கப்பட்டது.

(இ) இந்தச் சாலே கைவிடப்படவில்லை. இந்தச் சாலே மலேப்பகுதியில் ஓரளவு செல்கிறது. இது ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மண் சாலேயாகும். எனவே, இதனை ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மண் சாலேயாக மட்டுமே பேணி வர முடியும்.

(உ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த ரோடில் ஒரு 13 அல்லது 14 மைல் மராமத்து செய்ய வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இதற்கு 1½ லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நிதியிலிருந்து முன்பு செலவு செய்யப்பட்டது. ஊராட்சி